அ.வ எண் 20/2012 ஐயப்பன்(பிசா1) தேதி:07.09.2022

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

வாதிகள் 1 முதல் 3 மற்றும் பிரதிவாதிகள் 1 முதல் 9 ஆகியோர் இறந்துபோன ராமசுப்பு நாயக்கர் என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எல்லப்பன் வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி 3ம் பிரதிவாதியின் வாரிசுகள் 15 முதல் 17 பிதிவாதிகள் என்றால் சரிதான். வாதிகள் 1 முதல் 3 நபர்கள் 1 வது பார்ட்டியாகவும், 1,2 பிரதிவாதிகள் மற்றும் 4 முதல் 9 பிரதிவாதிகள், 15 முதல் 17 பிரதிவாதிகள் 2 வது பார்ட்டியாகவும் இருந்து கடந்த 08.08.2022 தேதியில் ஒரு சம்மத ஆவணம் பிறப்பித்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் என்னிடம் காட்டப்படும் சம்மத ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி பிராது 1வது தபசில் சொத்துக்கள் மற்றும் வழக்கில் காட்டப்படாத சொத்துக்கள் மேலும் 2வது தபசில் 1முதல் 4 ஐயிட்டம் மற்றும் 6 வது ஐயிட்டம் சொத்துக்கள் குறித்து 1வது பார்ட்டியான வாதிகள் மேற்படி 2 வது பார்ட்டியான பிரதிவாதிகளுக்கு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் 2 வது தபசில் 5ம் ஐயிட்டம் பொருத்து 2வது பார்ட்டி 1வது பார்ட்டிக்கு 3/9 பங்கை சொத்தில் வட பக்கம் விடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். 3வது தபசில் சொத்தைப் பொருத்து இந்த வழக்கின் இறுதி தீர்ப்பின் படி பிரித்துக்கொள்ள வேண்டும் என்றால் சரிதான். தாவா 3வது தபசில் 5மற்றும் 6 ஐயிட்டம் சொத்துக்களில் 13ம் பிரதிவாதிக்கு எவ்வித பாத்தியமோ உரிமையோ கிடையாது என்றும் எனவே, 13ம் பிரதிவாதி 14ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் மோசடியானது என்றால் சரிதான். 14.05.1960 ல் ஐயப்ப நாயக்கர் ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயிலின் படி ஐயப்ப நாயக்கர் அவரது பெண்மக்களான ஆவுடையம்மாள்,இலட்சுமியம்மாள்,சுப்பம்மாள் ஆகியோருக்கு உயிலில் கண்டுள்ள 3வது அட்டவணை சொத்தை கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.உயிலில் கண்டுள்ள 3வது அட்டவணையில் 6 ஐயிட்டம் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிலில் காட்டப்பட்டுள்ள 3வது அட்டவணை 2முதல் 6 ஐயிட்டம் சொத்துக்கள் தான் இந்த வழக்கில் 3வது அட்டவணை சொத்து என்றால் சரிதான்.

உயிலில் கண்டுள்ள 3வது அட்டவணை 1ம் ஐயிட்டம் சொத்தை ஆவுடையம்மாள் மற்றும் சுப்பம்மாள், இலட்சுமியம்மாள் வாரிசுகள் சேர்ந்து ஜேசுமணி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உயில் தான் ஐயப்பன் என்பவர் எழுதிய உயிலின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10,14 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.